# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 10
## First Term Examination – 2020 – Grade 10

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் | 22 | T | I, II, III | இரண்டு மணித்தியாலம் Two Hours |
| சுட்டெண் Index No | | | | புவியியல் |

### பகுதி – I

**மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1. ஞாயிற்றுத்தொகுதியில் கோல்களுக்கிடையே உயிரினங்கள் வாழக் கூடிய ஒரேஒரு கோளாகப் ……………............... சிறப்புற்று விளங்குகின்றது.
   ( செவ்வாய் / புவி / வியாழன் )
2. புவியின் மேற்பரப்பின் பரப்பளவு ………………………… மில்லியன் சதுர கிலோமீற்றர்களாகும்.
   ( 510 / 480 / 610 )
3. புவித்தொகுதி ………………………. உபதொகுதிகளை உள்ளடக்கியுள்ளது.
   ( மூன்று நான்கு ஐந்து )
4. வளிமண்டலம் உயிர்கள் சுவாசிப்பதற்கு தேவையான …………………………….. வாயுவை வழங்குகின்றது.
   ( காபன் ஒட்சிசன் காபனீரொக்சைட் )
5. இடைமண்டலம் கடல் மட்டத்திலிருந்து ………………………… கிலோமீற்றர் உயரம் வரை பரந்து காணப்படுகிறது.
   ( 50 80 120 )
6. சமுத்திர நீர்ப்பரப்பிலிருந்து உயர்ச்சி அடைந்துள்ள பாரிய நிலத்திணிவுகள் ………………………………. என அழைக்கப்படுக்கிறது.
   ( சமுத்திரங்கள் கண்டங்கள் கடல்கள் )
7. ஆபிரிக்க கண்ட மேடைக்குள் அமைந்துள்ள தீவு …………………………. ஆகும்.
   ( போர்னியோ ஜாவா மடகஸ்கார் )
8. கடகக்கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடையில் …………………………….காலநிலை வலயம் அமைவுபெற்றுள்ளது.
9. உலகின் கால நிலைப்பரம்பல் பற்றிய கருத்தினை முதன்முதலில் வெளியிட்டவர் ………………………… ஆவார்
   (மில்லர்/ தோன்வைற் / அரிரேட்டில்)
10. ஆசியாவிற்கு வெளியே ………………………… வில் உள்ள அரேடாலிஸ் பள்ளத்தாக்கு பிரதேசத்தில் நெற் செய்கை நடை பெறுகிறது.
    (ஆபிரிக்கா / அவுஸ்திரேலியா / அமெரிக்கா)

❖ **பின்வரும் கூற்றுக்களை சரியாயின் "ச"ஐயும் பிழையாயின் "பி" யையும் சுற்றி வட்டம் வரைக**

11. புவியீர்ப்பு சக்தி காரணமாக வளிமண்டலம் புவியுடன் இணைந்து காணப்படுகின்றது. (ச / பி)
12. வளிமண்டலத்தில் அதிகளவு காணப்படும் வாயு காபனீரொட்சைட்டு ஆகும் (ச / பி)
13. கடல் மட்டத்திற்கு ஒவ்வொரு 100m உயரத்திற்கும் $0.64^0C$ வெப்பநிலை குறைவடைந்து செல்வது சூழல் நழுவு வீதம் எனப்படும் (ச / பி)
14. புவியின் பிரதான பௌதீக பண்புகளாக தரைத்தோற்றமும் காலநிலையும் விளங்குகிக்னறன (ச / பி)
15. பசுபிக் சமுத்திரத்தில் மிக ஆழமான மரியானா அகழி அமைந்துள்ளது. (ச / பி)

❖ **'அ' நிரலில் உள்ள அம்சங்களை 'ஆ' நிரலுடன் பொருத்தி பார்க்கும் போது சரியான விடையினை குறிக்கும் இலக்கத்தினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16. கண்டத்தின் பரப்பளவு

| அ | ஆ |
|---|---|
| ஆசியா | A – 12.0% |
| ஆபிரிக்கா | B – 16.4% |
| வடஅமெரிக்கா | C – 29.5% |
| | D – 20.4% |

1. A,C,D 2. C,D,B 3. D,B,A 4. B,C,D (……)

17. வளிமண்டலத்தின் பிரதான வாயுக்கள்

| அ | ஆ |
|---|---|
| ஒட்சிசன் | A – 78.09% |
| ஆகன் | B – 0.03% |
| நைதரசன் | C – 20.95% |
| | D – 0.93% |

1. C,D,A 2. C,D,B 3. C,B,D 4. D,A,C (……)

18. புவியிலுள்ள நீர்ப்பரம்பல்

| அ | ஆ |
|---|---|
| ஏரி நீர் | A – 8% |
| மண்ணீர் | B – 1% |
| வளிமண்டல நீராவி | C – 52% |
| | D – 38% |

1. C,D,B 2. C,D,A 3. C,B,D 4. D,C,B (……)

19. கண்டங்களில் அமைவு பெற்றுள்ள ஏரிகள்

| அ | ஆ |
|---|---|
| தென்னமெரிக்கா | A – லடோவா ஏரி |
| ஆபிரிக்கா | B – அயர் ஏரி |
| ஐரோப்பா | C – விக்டோரியா ஏரி |
| | D – தித்துக்கா ஏரி |

1. C,A,D  2. C,D,A  3. D,C,B  4. D,C,A (……)

20. ஆசியாவிற்கு வெளியில் நெற்செய்கை நடைபெறும் பிரதேசங்கள்

| அ | ஆ |
|---|---|
| இத்தாலி | A – மிசிசிப்பி ஆற்றுப் பள்ளத்தாக்கு |
| ஆபிரிக்கா | B – மறேடாலிங் நதிப்பள்ளதாக்கு |
| வட அமெரிக்கா | C – போநதி வடிநிலம் |
| | D - நைல் நதி கழிமுகம் |

1. CDA  2. CDB  3. BCD  4. CAD (……)

❖ **மிகப் பொருத்தமான விடையினை வைத்து வெற்றிடங்களை நிரப்புக**

21. புவியின் ஓடு மற்றும் மேல் மூடியினை உள்ளடக்கிய வலயம் ............................... எனப்படுகின்றது.

22. புவியைச் சூழ்ந்து காணப்படும் பல்வேறு வகையான வாயுக்களை உள்ளடக்கிய மெல்லிய படை ............................... ஆகும்

23. புவியின் மேற்பரப்பிலிருந்து 8 – 12 km உயரம் வரை ............................... மண்டலம் பரந்து காணப்படகின்றது.

24. புவியின் மொத்த நீரின் கொள்ளளவு ............................... மில்லியன் கியூபிக் மஅ எனக்கண்டறியப்பட்டுள்ளது.

25. புவியோட்டிற்கும் மையத்திற்கும் இடையில் அமைந்துள்ள படை ............................... ஆகும்.

26. புவியில் பாரியளவிலான நில உருவங்களாக கண்டங்களும் ............................... காணப்படுகின்றன.

27. நீரினால் சூழப்பட்ட பல்லுருவ அமைப்பில் காணப்படும் சிறிய நிலப்பரப்பு ............................... எனப்படும்.

28. பல்வேறு சிகரங்களையும் சாய்வுகளையும் கொண்ட உயரெழுச்சிகளுடன் கூடியதாக பரந்துள்ள நிலத்தோற்றங்கள் ............................... ஆகும்.

29. நிலத்தில் காணப்படும் இறக்க்ங்களில் நன்னீா நிறைந்து காணப்படும் போது ............................... என அழைக்கப்படுகின்றது.

30. அயனக்காலநிலை வலயத்தின் விசேடமான காலநிலை அம்சமாக ............................... விளங்குகின்றது.

❖ **சரியான விடையினை தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31. உயர் எல்லைக்கு அருகாமையில் சாதாரண விமானங்கள் பயணம் செய்யும் படை எது?
    1. படை 2. மாறன் 3. இடை 4. வெப்பம்

32. புவியிலுள்ள சமுத்திர நீரின் சதவீதம் யாது?
    1. 2.5 % 2. 38 % 3. 97.5 % 4. 79%

33. கண்ட கேடு கொண்டுள்ள பாறை வகை யாது?
    1. மணல் 2. கருங்கல் 3. சுண்ணக்கல் 4. தொலமைற்

34. சீயல் படையில் அடங்கியுள்ள கனியங்கள் எவை?
    1. சிலிக்கா, மக்னீசியம் 2. சிலிக்கா, அலுமினியம்
    3. சிலிக்கா, இரும்பு 4. மக்னீசியம், இரும்பு

35. பின்வருவனவற்றுள் எரிமலையால் உருவான தீவு எது?
    1. கிறீன்லாந்து 2. மாலைதீவு 3. ஐஸ்லாந்து 4. மடகஸ்கார்

36. பருமன் அடிப்படையில் இரண்டாவது இடத்தில் அமைந்துள்ள சமுத்திரம் எது?
    1. இந்து 2. பசுபிக் 3. அத்திலாண்டிக் 4. ஆட்டிக்

37. உலகினள் மிகப் பெரிய மேட்டு நிலம் எது?
    1. தக்கனம் 2. திபெத் 3. பமீா 4. மொஸ்கோலியா

38. பின்வருவனவற்றுள் ஏரியிலிருந்து உற்பத்தி ஆகும் நதி எது
    1. நைல் நதி 2. தோமஸ் நதி 3. கங்கை நதி 4. இந்து நதி

39. ஆசிய நாடுகளில் ஊழியச்செறிவு கொண்ட பயிர்ச்செய்கையாக காணப்படுவது.
    1. கோதுமை 2. நெல் 3. குரக்கன் 4. தேயிலை

40. தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் கூடிய கவனஞ் செலுத்தும் நாடு எது?
    1. இலங்கை 2. இந்தியா 3. பாகிஸ்தான் 4. சீனா

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

01. அ. 1. தேசப்படம் என்றால் என்ன?
    2. இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களை காட்டுவதற்கான 1 : 50000 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்பட்ட படத்தால்களின் எண்ணிக்கை யாது?
    3. சமவுயரக் கோட்டினை வரைவதற்கு பயன்படுத்தப்படும் நிறம் யாது?
    4. 1 : 50000 இட விளக்கப்படத்தில் சிவப்பு நிறத்தால் வரைந்து காட்டப்படும் அம்சங்கள் இரண்டைப் பெயரிடுக.
    5. இடவிளக்கப்படத்தில் உள்ள பின்வரும் நியமக் குறியீடுகளை உரிய நிறங்களைப் பயன்படுத்தி வரைந்து காட்டுக.
        1. நெற்செய்கை
        2. மாகாண எல்லை
        3. சிறுவீதி
        4. குளம்
        5. வைத்தியசாலை
        6. பாடசாலை

(4 + 6 = 10 புள்ளிகள்)

ஆ. உமக்கு தரப்பட்டுள்ள உலகப்புற உருவப்படத்தினை கவனமாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




1. A, B, C ஆகிய எழுத்துக்களில் உலகின் மிகப் பெரிய தீவான கிறீன்லாந்தினைக் குறிக்கும் எழுத்து.
2. D, E, F ஆகிய எழுத்துக்களில் எரிமலையால் உருவான ஐஸ்லாந்தினைக் குறிக்கும் எழுத்து?
3. G, H, I ஆகிய எழுத்துக்களில் மிகப் பெரிய கடலான மத்திய தரைக்கடலை குறிக்கும் எழுத்து
4. J, K, L ஆகிய எழுத்துக்களில் றொக்கி மலையை குறிக்கும் எழுத்து.
5. M, N, O ஆகிய எழுத்துக்களில் அமேசன் நதியைக் குறிக்கும் எழுத்து

(5 x 1 = 5 புள்ளிகள்)

இ. இலங்கைப்படத்தினை கவனமான அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




1. A, B, C ஆகிய எழுத்துக்களில் கொழும்பு மாவட்டத்தை குறிக்கும் எழுத்து.
2. D, E, F ஆகிய எழுத்துக்களில் கொட்டியாரக்குடாவை குறிக்கும் எழுத்து.
3. G, H, I ஆகிய எழுத்துக்களில் புத்தளம் கடனீரேரியைக் குறிக்கும் எழுத்து.
4. J, K, L ஆகிய எழுத்துக்களில் யாழ்ப்பாண மாவட்டத்தை குறிக்கும் எழுத்து.
5. M, N, O ஆகிய எழுத்துக்களில் பருத்தித்துறை முனையினைக் குறிக்கும் எழுத்து.

(5 x 1 = 5 புள்ளிகள்)

02. 1. கற்கோளத்தின் இரண்டு பதிகளும் எவை? (2புள்ளிகள்)
2. கற்கோளத்தின் பயன்பாடுகள் 3 தருக? (3 புள்ளிகள்)
3. a. ஓசோன் படையின் சிறப்பம்சம் யாது? (2 புள்ளிகள்)
b. மனிதனுக்கு வளிமண்டலத்தினால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக? (3புள்ளிகள்)

03. 1. புவியில் நீர் பரம்பியுள்ள வடிவங்கள் நான்கினைக்குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. நீரன் தரம் குறைவடைந்து செல்வதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)
3. a. நீரியல் வட்டச் செயன்முறையின் படிமுறைகள் எவை? (2 புள்ளிகள்)
b. நீரியல் வட்டச் செயன்முறையினை வரைபடம் மூலம் சுருக்கமாக விபரிக்குக.(3 புள்ளிகள்)

04. 1. தீவுகள் என்றால் என்ன? (2 புள்ளிகள்0
2. க்ணட மேடை, கண்சாய்வு என்பவற்றை வரையறை செய்க. (3 புள்ளிகள்)
3. a. கடல்கள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
b. சமுத்திரங்களையும் கடல்களையும் வளங்களாக மனிதன் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மூன்றினைக்குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

05. 1. மேட்டு நிலங்கள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
2. இலங்கையிலுள்ள மேட்டு நிலங்கள் 3தருக. (3 புள்ளிகள்)
3. a. உருவாக்க முறையின் அடிப்படையிலும் இடஅமைவு அடிப்படையிலும் விசேட பெயால் கொண்டு அழைக்கப்படுகின்ற சமவெளிகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
b. சமவெளிப்பிரதேசங்களோடு தொடர்டபுடைய மானிட நடவடிக்கைகள் 3 தருக? (3 புள்ளிகள்)

06. 1. காலநிலை என்றால் என்ன என்பதை வரையறை செய்க
2. உலக காலநிலை பாகுபாட்டினை முன்வைத்தவர்களுள் மூன்று பேரினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. a. உலகின் 3 பிரதாக காலநிலை வலயங்களும் எவை? (2 புள்ளிகள்)
b. மேலே Aயில் குறிப்பிடப்பட்ட காலநிலை வகை ஒன்றினைத் தெரிவு செய்து அதன் காலநிலைப்பண்புகள் 3இனைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

07. 1. வட அமரிக்காவில் நெற் செய்கை நடைபெறும் பிரதேசங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. நெற்பயிர்ச்செய்கைக்கு சாதகமான பௌதீக காரணிகள் 3 தருக. (3 புள்ளிகள்)
3. a. நெற்பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் 3 தருக? (2 புள்ளிகள்)
b. நெற்பயிர்ச்செய்கையின் அண்மைக்கால போக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)